தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், மதுரை (லிமிடெட்), திண்டுக்கல் மண்டலத்தில், பொதுமேலாளர் முத்துகிருஷ்ணன் தலைமையில், போக்குவரத்து அலுவலர்களும் தொழிலாளர்களும் மனித உரிமைகள் நாள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மேலும், திண்டுக்கல் மண்டலத்தில் உள்ள 16 பணிமனைகளில், அந்தந்த கிளை மேலாளர்கள் முன்னிலையில் போக்குவரத்து தொழிலாளர்கள் உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

## புதிதாக நியமிக்கப்பட்ட காரமடை நகர திமுக பொறுப்பாளர் கே.ஜி குருபிரசாத்துக்கு காரமடை நகர சார்பு அணியினர் வாழ்த்து

மேட்டுப்பாளையம், டிச.11

கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்றத்தொகுதிகாரமடை நகர திமுக பொறுப்பாளராக தலைமைக் கழகத்தால் புதிதாக நியமனம் செய்யப்பட்ட கே.ஜி. குரு பிரசாத் அவர்களுக்கு, காரமடை நகர திமுக ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் வி.ஆர். பத்ரி தலைமையில்

காரமடை நகர 17வது வார்டு அவைத் தலைவர் முத்துசாமி, துணைச் செயலாளர் ஷீலா சசிகுமார்,பிரதிநிதி பிரேமா சரவணகுமார், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மு. சுபாஷ்,பரத், ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் ஆர். அருள்குமார், தே. குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பூபதி, திமுக தொண்டரணி துணை அமைப்பாளர்கள் வி.ஆர். ராம்கி, சூரிய பிரகாஷ், மாணவரணி துணை அமைப்பாளர் கவின், விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அரவிந்த், உள்ளிட்டோர் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தனர்.

உடன் காரமடை நகர 17வது வார்டு இளைஞரணி அமைப்பாளர் கோபாலகிருஷ்ணன், துணை அமைப்பாளர் ஆறுமுகம் மற்றும் 17வது வார்டு சாஸ்திரி நகர், அம்பேத்கர் நகர், கேகே நகர், பட்டிக்காரம்பாளையம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் 50க்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.

## தென்காசியில் காலமுறை ஊதியம் வழங்க கோரி அங்கன்வாடி ஊழியர்கள் சாலை மறியல்

தென்காசி, டிச.11

அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் என்கின்ற கோரிக்கை யை நிறைவேற்ற வலியுறுத்தி தமிழகம் முழுவதும் தமிழ்நாடு அரசு அங்கன்வாடி ஊழியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் மாவட்ட தலைநகரங்களில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

தென்காசி மாவட்டம் தென்காசி நகரப் பகுதியில் உள்ள புதிய பேருந்து நிலையம் எதிரே அங்கன்வாடி ஊழியர்கள் கூட்டமைப்பு சார்பில் தேர்தல் கால வாக்குறுதி 311 ன்படி அங்கன்வாடி உழியர் மற்றும் உதவியாளர்யாளர்களை அரசு ஊழியராக்கி கால முறை ஊதியம் வழங்கவும். 50,000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களை நிரப்ப கோரியும் குறைந்த பட்ச ஓய்வூதியம் ரூ 9000/வழங்கிடவேண்டியும் பணி ஓய்வின் போது பணிக்கொடை அங்கன்வாடி பணியாளர்களுக்குரூ10,00,000 லட்சமும், உதவியாளருக்கு ரூ 5,00,000 லட்சமும் வழங்கவும் போன்ற கோரிக்கைகளை நிறைவேற்ற கோரியும் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

தென்காசியில் இருந்து மதுரை செல்லும் சாலையில் நடைபெற்ற இந்த சாலை மறியல் போராட்டத்தில் சுமார் 200 க்கும் மேற்பட்ட அங்கன்வாடி பணியாளர்கள் பங்கேற்று தமிழக அரசின் தேர்தல் வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினர்.

தொடர்ந்து, சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட அங்கன்வாடி ஊழியர்களை போலீசார் கைது செய்தனர்.

## ரூ.12 லட்சம் மதிப்பிலான மானியத்திற்கான ஆணை: மாவட்ட கலெக்டர் வழங்கினார்

விருதுநகர், டிச.11

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், உப்பத்தூர் தமிழ்நாடு கிராம வங்கி கிளையில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகத்தின்(தாட்கோ) சார்பில் ஆடு/மாடு வளர்ப்பு தொழில் புரிவதற்கு கடனுதவி பெற்ற 24 பயனாளிக்கு தலா ரூ.50 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.12 இலட்சம் மானியத்திற்கான ஆணைகளை மாவட்ட கலெக்டர் என்.ஓ.சுகபுத்ரா வழங்கினார்.

தமிழ்நாடு அரசானது, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம்(தாட்கோ) மூலம் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் நலனுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதோடு, ஆதிதிராவிடர் / பழங்குடியினர் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலை / சுய வேலைவாய்ப்புக்காக திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல் மற்றும் அரசாங்கத்தால் ஒப்படைக்கப்பட்ட கட்டுமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, தாட்கோ நிறுவனம் மூலம் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்களுக்கு, நிலம் வாங்கும் திட்டம், சுய உதவி குழுக்களுக்கு பொருளாதார உதவி, திறன் மேம்பாட்டு பயிற்சி உள்ளிட்ட வாழ்வாதாரத் திட்டங்கள் மூலம் வங்கி கடனுதவிக்கான மானியங்களையும், சுகாதாரப் பணியாளர்களுக்கு விபத்துக் காப்பீட்டு, இயற்கை மரணத்திற்கு உதவி, இறுதிச் சடங்குகளுக்கு உதவி, திருமணத்திற்கான உதவி, மகப்பேறு உதவி, கண் கண்ணாடி, முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட நிதியுதவிகளையும் வழங்கி வருகிறது.

அந்த வகையில், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், உப்பத்தூர் தமிழ்நாடு கிராம வங்கி கிளையில் இன்று (10.12.2025) தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகத்தின் (தாட்கோ) சார்பில் ஆடு/மாடு வளர்ப்பு தொழில் புரிவதற்கு கடனுதவி பெற்ற 24 பயனாளிக்கு தலா ரூ.50 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.12 லட்சம் மதிப்பிலான மானியத்திற்கான ஆணை களை மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா வழங்கினார்.

மேலும், பயனாளிகளிடம் குடும்பத்தின் வாழ்வாதாரம், பொருளாதார மேம்பாடு, குழந்தை கல்வியின் முக்கியத்துவம், அரசு நலத்திட்ட உதவிகள் உள்ளிட்டவை குறித்து கலந்துரையாடினார்.

இத்திட்டத்தின் கீழ், பயனடைந்தவர்கள் எங்கள் வாழ்வாதார மேம்பாட்டிற்கான கடனுதவிகளைவழங்கியதோடு, அதற்கான மானியத்தையும் வழங்கிய தமிழ்நாடு அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில், தாட்கோ மாவட்ட மேலாளர்(பொ) மஞ்சுளா, சாத்தூர் கோட்டாட்சியர் கனகராஜ், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பாண்டிச்செல்வன், அரசு அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


**படிவம் ஜி ஐ உருவாக்குவதற்கான கொரிஜெண்டம்**
**ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு**

**குப்தா பவர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்**

(திவால்நிலை மற்றும் திவால்நிலை (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால்நிலை தீர்வு செயல்முறை) விதிமுறைகள், 2016 இன் விதிமுறை 36A (1) இன் கீழ்

திவால்நிலை மற்றும் திவால்நிலை குறியீடு, 2016 மற்றும் திவால்நிலை மற்றும் திவால்நிலை (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால்நிலை தீர்வு செயல்முறை) விதிமுறைகள், 2016 ஆகியவற்றின் படி வெளியிடப்பட்ட 25/11/2025 தேதியிட்ட படிவம் ஜி ஐப் பொறுத்தவரை, ஆர்வத்தைவெளிப்படுத்துவதற்கானகடைசிதேதி 7(ஏழு)நாட்களுக்குநீட்டிக்கப்பட்டுள்ளது, அதன்படி படிவம் ஜி மற்றும் ஐஇஒஐ வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வுகளுக்கான திருத்தப்பட்ட தேதிகள்.

| வ.எண். | தொடர்புடைய விபரங்கள் | காலவரிசைகள் |
|---|---|---|
| 10. | ஆர்வ வெளிப்பாட்டைப் பெறுவதற்கான கடைசி தேதி | டிசம்பர் 17, 2025 (டிசம்பர் 10, 2025 இலிருந்து நீட்டிக்கப்பட்டது) |
| 11. | வருங்காலத் தீர்வு விண்ணப்பதாரர்களின் தற்காலிகப் பட்டியல் வெளியிடப்பட்ட தேதி | டிசம்பர் 27, 2025 (டிசம்பர் 20, 2025 இலிருந்து நீட்டிக்கப்பட்டது) |
| 12. | தற்காலிக பட்டியல் விண்ணப்பதாரர்களுக்கு ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | ஜனவரி 02, 2026 (டிசம்பர் 26, 2025 இலிருந்து நீட்டிக்கப்பட்டது) |
| 13. | வருங்கால தீர்வு விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்ட தேதி | ஜனவரி 07, 2026 (டிசம்பர் 30, 2025 இலிருந்து நீட்டிக்கப்பட்டது) |
| 14. | வருங்கால தீர்வு விண்ணப்பதாரர்களுக்கு தகவல் குறிப்பாணை, மதிப்பீட்டு அணி மற்றும் தீர்வுத் திட்டங்களுக்கான கோரிக்கைகளை வழங்கிய தேதி. | ஜனவரி 10, 2026 (ஜனவரி 03, 2026 இலிருந்து நீட்டிக்கப்பட்டது) |
| 15 | தீர்வுத் திட்டங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | பிப்ரவரி 10, 2026 (பிப்ரவரி 03, 2026 இலிருந்து நீட்டிக்கப்பட்டது) |
| 16. | இஒஐ சமர்ப்பிக்கும் செயல்முறை மின்னஞ்சல் ஐடி | ip.guptapower@gmail.com |

குறிப்பு: 25/11/2025 தேதியிட்ட படிவம் ஜி இன் பிற உள்ளடக்கங்களும் விதிமுறைகளும் அப்படியே இருக்கும்.

தேதி: 11 டிசம்பர், 2025
இடம்: சூரத்

எஸ்டி/-
சிஏ. பிரதீப் குமார் கப்ரா
ஆர்.பி. எம்/எஸ். குப்தா பவர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்
ஐபிபிஐ பதிவு எண்.: IBBI/IPA-001/IP-P01104/2017-18/11790
மின்னஞ்சல்: ip.guptapower@gmail.com



## காணவில்லை அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், ஒக்கூர் அஞ்சல், மேலமங்களம் கிராமம், சுதவு எண்.1/126 என்ற முகவரியில் வசிக்கும் திரு.வீரப்பன் அவர்களின் மனைவி அழகுமீனாள் (ஆதார் அட்டை எண்.4097 7122 3861) ஆகிய நான் எனக்கு சொந்தமான சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், மதகுபட்டி சப்டி, ஒக்கூர் கிராமம், சர்வே எண்.426/3B, 426/3B2A, 2400 சதுரடி புஞ்சை. சிவகங்கை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.750/2004ன் படி நான் கிரையம் பெற்ற அசல் ஆவண பத்திரத்தை கடந்த 20.11.2025ம் தேதி சிவகங்கை பஸ் நிலையத்திலிருந்து இறங்கி செல்லும் போது சிவகங்கை பஸ் ஸ்டாண்டில் பஸ் நிற்கும் போது தவறுதலாக போது என்னை அறியாமல் தொலைத்து விட்டேன். உடனடியாக அக்கம் பக்கம் தேடிப்பார்த்தும், விசாரித்துப் பார்த்தும் மேற்சொன்ன ஷை பத்திரம் கிடைக்கவில்லை. இது குறித்து காவல்துறை இணையதள புகார் வாயிலாக கடந்த 09.12.2025ம் தேதி புகார் செய்து புகார் எண்ணாகCAV25610347 பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொலைந்த அசல் ஆவண கிரைய பத்திரத்தை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்க்கண்ட எனது முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் .

இப்படிக்கு
அழகுமீனாள்
க/பெ. வீரப்பன்
கதவு எண்.1/126,
மேலமங்களம் கிராமம்,
ஒக்கூர் அஞ்சல், சிவகங்கை வட்டம் & மாவட்டம்.
செல்: 95852 37009

தேனி மாவட்டம் கம்பம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் மீனாட்சி சுந்தரம் அவர்களின் தலைமையில் இலாஹி பள்ளியில், வளரிளம் பெண்கள் மற்றும் இளம் வயது கர்ப்பத் தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இதில் நகர்மன்ற உறுப்பினர் சாதிக், பள்ளி தாளாளர் ஹாஜி ஹனபி, தலைமை ஆசிரியர் ஆலாவுதீன், ஆசிரியர் அப்பாஸ், சுகாதார ஆய்வாளர் சிவசஜு மற்றும் செவிலியர்கள் பிரியா, ராம் லட்சுமி மற்றும் ஆசிரியைகள், மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ராஜபாளையத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் அன்னை சோனியா காந்தி பிறந்தநாள் தின விழா

ராஜபாளையம், டிச.11

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் நகர் காங்கிரஸ் சார்பில் இந்திய தேசிய காங்கிரஸின் முன்னாள் தலைவரும் பாராளுமன்ற குழுதலைவருமான அன்னை சோனியா காந்தி 79வது பிறந்த நாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ராஜபாளையம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் (சொக்கர் கோவில் ) நகர தலைவரும், நகர் மன்ற உறுப்பினருமானசங்கர்கணேஷ் தலைமையில் விருதுநகர் மேற்கு மாவட்ட தலைவர் ரெங்கசாமி முன்னிலையில் சிறப்பு வழிபாடு நடைபெற்று பொதுமக்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஐ என் டி யூ சி பிரபாகர், நகர்மன்ற உறுப்பினர் புஷ்பம், ரவி ராஜா, ஏ பி சக்தி,பசும் பொன், வெங்கட்ராமன், ராஜாராம், லட்சுமணன், முனியாண்டி, பச்சையாத்தான் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தாராபுரம் அருகே சொகுசு கார் எரிந்து சேதம்: குண்டடம் போலீசார் விசாரணை

தாராபுரம், டிச.11

திருப்பூர் மாவட்டம் தாராபுரம்அருகேஉள்ள மூலனூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட சின்ன மருதூர் பகுதியைச் சேர்ந்தவர் சின்னசாமி. இவரது மகன் ஆனந்த். விவசாய தொழில் செய்து வருகிறார். இந்நிலையில் ஆனந்த் உபயோகப்படுத்தி வந்த மகேந்திரா லோகன் என்ற சொகுசு காருக்கு பதிலாக மற்றொரு புதிய காரை வாங்குவதற்காக தாராபுரம் பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் கன்சல்டிங்கில் கொடுத்துள்ளார். இந்நிலையில் கார் விற்பனை செய்யும் தனியார் கன்சல்டிங்கில் இருந்து கோவைக்கு எடுத்துச் செல்வதற்காக கன்சல்டிங்கில் வேலை பார்த்து வரும் ஓட்டுநர் ஹசிக் காதர் (30) என்பவர் கோவையில் உள்ள மகேந்திராஷோரூமுக்கு எடுத்துச் சென்றுள்ளார். தாராபுரத்தில் இருந்து எடுத்துச் சென்ற சொகுசு காரானது குண்டடம் அருகே உள்ள சூரியநல்லூர் டோல்கேட் அருகில் சென்று கொண்டிருந்த பொழுது காரின் முன் பகுதியில் இன்ஜினில் இருந்து புகை வரவே ஓட்டுநர் காரை நடுவழியில் நிறுத்தி யுள்ளார். தொடர்ந்து ஓட்டுநர் ஹசிக் காதர்

காரை நிறுத்திவிட்டு பார்க்கும் பொழுது கார் மள மள வென தீப்பிடித்து எரியதுவங்கியது அதனைத் தொடர்ந்து ஓட்டுநர் ஹசிக் காதர் காவல் நிலையத்திற்கும் தீயணைப்புத்துறையினருக்கும் தகவல் கொடுத்த தால் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த காவல் துறையினர் மற்றும் தீயணைப்புத்துறையினர் எரிந்து கொண்டிருந்த காரை தண்ணீர் ஊற்றி அணைத்தனர்.

மேலும் இந்த தீ விபத்தில் கார் முற்றிலும் எரிந்து கரிக்கட்டை போல் கருகி எலும்புக் கூடு போல் நாசமாகியது. கார் பற்றி எரிந்த சம்பவம் குறித்து குண்டடம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சொகுசு கார் நடுவழியில் தீப்பற்றி எரிந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.


சார்பு நீதிமன்றம் சிவகங்கை
I.A.No.3/2025 in
O.S.No.255/2023

கனரா வங்கி
சிவகங்கை கிளை
சிவகங்கை
–வாதி

எதிர்
1.வைதீஸ்வரி
த/பெ.சரவணக்குமார்
கதவு எண்.88/102 ,
மதுரை ரோடு,
சிவகங்கை டவுன்.
சிவகங்கை தாலுகா & மாவட்டம்.
2.சரவணக்குமார்
த/பெ.சேதுராமன்
கதவு எண்.88/102,
மதுரை ரோடு,
சிவகங்கை டவுன்,
சிவகங்கை தாலுகா & மாவட்டம்
–பிரதிவாதிகள்

மேற்படி நிர் தாவா அசல் வழக்கிலும் 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளுக்கு பலமுறை நீதிமன்றம் மூலம் சம்மன் அனுப்பியும் பெற்றுக் கொள்ளாத காரணத்தினால் பத்திரிக்கை அறிவிப்பு செய்து மேற்படி நிர் 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளுக்கு மேற்படி வழக்கை பற்றி அறிந்து கொள்ள ஏதுவாக மேற்படி I.A.No.03/2025 சமூகம் நீதி மன்றத்தில் உத்தரவாகியுள்ள படியால் வருகின்ற 18.12.2025–ம் தேதியன்று சமூகம் நீதி மன்றத்தில் காலை 10.30 மணிக்கு தாங்கள் நேரிலோ, அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி விளக்கம் தரவேண்டியும், தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலை பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது.

A.S.ஸ்ரீசாய் சுந்தர் B.Com.B.L
அட்வகேட் /நோட்டரி பப்ளிக்
13, சாத்தப்பர் தெரு,
வழக்கறிஞர், சிவகங்கை.